2013 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 298, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

298—

உயர்மட்டப் பாலம்

***1662—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, 95 பேளூர் ஊராட்சியில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன். கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னகரட்டூர் கிராமத்திற்கு அருகிலுள்ள கல்லாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டிய இடம், கூடமலையிலிருந்து நனங்கரை செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலையில் 3.2-வது கிலோ மீட்டரில் உள்ளது. 95, பேளூர் ஊராட்சியிலுள்ள சின்னகரட்டூர், பெரியகரட்டூர், நரிப்பாடி, நனங்கரை, என்.நல்லமாதி, காட்டுக்கொட்டகை ஆகிய ஆறு குக்கிராமங்களில் வாழும் சுமார் 2,400 மக்கள், மழைக் காலங்களில் கல்லாற்றில் வெள்ளம் வருகின்றபோது, தங்கள் குடியிருப்புகளுக்கு வரவேண்டுமெனில், அருகிலுள்ள செந்தாரப்பட்டி பேரூராட்சி வழியாக சுமார் 11 கிலோ மீட்டர் சுற்றி, மாற்றுப் பாதையில் வரவேண்டியுள்ளது. சின்னகரட்டூர் அருகிலுள்ள கல்லாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கு ரூ.130 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் உயர்மட்டப் பாலம் அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 95, பேளூர் ஊராட்சிப் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, 95, பேளூர் ஊராட்சிப் பொதுமக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 299, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

299—

குளிர்பதனக் கிடங்கு

***27898—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் பகுதியில் வேளாண் விளை பொருட்களுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2012-2013 ஆம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டுமானப் பணிகள் விரைவில் முடியவிருக்கின்றன. எனவே, கட்டுமானப் பணிகள் முடிவுற்றபின், விவசாயிகள் குளிர்பதனக் கிடங்கினைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.